



திருச்சி மாவட்டம் லால்குடி அருகே விரகாலூரில் நடைபெற்ற ஸ்டேன்ஸ் சுவாமி சிலை திறப்பு விழா, மற்றும் சனநாயக எழுச்சி மாநாட்டினை பள்ளி கல்விக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி துவக்கி வைத்தார்.தொடர்ந்து ஸ்டேன் சுவாமி சிலையை கழக துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி மற்றும் சிதம்பரம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தொல். திருமாவளவன் ஆகியோர் திறந்து வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சியில் இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாநில செயலாளர் முத்தரசன், இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் சண்முகம், தவத்திரு திருடிக்குடில் சுவாமிகள், திராவிடர் விடுதலைக் கழக தலைவர் கொளத்தூர் மணி, கிறிஸ்தவ நல்லெண்ண இயக்க தலைவர், சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், லால்குடி சட்டமன்ற உறுப்பினர் சௌந்தரபாண்டியன், காங்கிரஸ் கட்சி திருச்சி வேலுச்சாமி, திருச்சி மத்திய மாவட்டக் கழக செயலாளர் வைரமணி,இந்திய யூனியன் முஸ்லீம் லீக் மாநில பொதுச் செயலாளர் முஹமது அபூபக்கர் உள்ளிட்ட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.


## சென்னை வடக்கு மாவட்டக் கழகம் சார்பில்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினிடம் ரூ.1 கோடி தேர்தல் நிதி!

## மாவட்டக் கழகச் செயலாளர் ஆர்.டி.சேகர் வழங்கினார்!

சென்னை, ஜூலை 6-

கழக இளைஞர் அணிச் செயலாளர்- துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கழக இளைஞர் அணிச் செயலாளராக பொறுப்பேற்று, ஏழாவது ஆண்டில் அடி எடுத்த வைத்த நாளில் (04/07/2025) சென்னை வடக்கு மாவட்டத்தில் பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலைகள், கலைஞர் நூலகங்களைத் திறந்து வைத்தல் உட்பட பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்.




தமிழ்நாட்டின் தலைமகன் பேரறிஞர் அண்ணா அவர்களின் மணி விழாவின்போது, 1970-ஆம் ஆண்டு, தமிழ்நாடு முழுவதும் 60 சிலைகளை முத்தமிழறிஞர் கலைஞர் அமைத்தார். அதில், சென்னை ராயபுரத்தில் அமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணாவின் சிலை தற்போது புதுப்பிக்கப்பட்டு, அருகிலேயே முத்தமிழறிஞர் கலைஞருக்கும் சிலை எழுப்பப்பட்டுள்ளது.

இரு தலைவர்களின் திருவுருவச் சிலையை இளைஞர் அணிச் செயலாளர்- துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வின்போது, சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், கழகத்திற்கு தேர்தல் நிதியாக ரூ.1 கோடி வழங்கினார். தேர்தல் நிதியைப் பெற்றுக் கொண்ட கழக இளைஞர் அணிச் செயலாளர், “மாநிலத்திலேயே முதல் மாவட்டமாக ஒரு கோடி ரூபாய் தேர்தல் நிதி வழங்கி, மற்ற மாவட்டக் கழகங்களுக்கு எல்லாம் முன்னுதாரணமாக சென்னை வடக்கு மாவட்டக் கழகம் திகழ்கிறது” எனப் பாராட்டினார்.

அதனைத்தொடர்ந்து, பெரம்பூர், ராயபுரம் , ஆர்.கே நகர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகங்களை திறந்துவைத்தார்.

அதேபோல, ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.ஜெ.எபினேசர் ஏற்பாட்டில், அமைக்கப்பட்ட தையல் பயிற்சி, கணினிப் பயிற்சி மையம், கழக இளைஞர் அணி அறக்கட்டளை சார்பாக, ஆர்.கே. நகரில் அமைக்கப்பட்ட கேரம் விளையாட்டுப் பயிற்சி மையத்தையும் திறந்துவைத்து சிறப்பித்தார்.

## வருகிற 15 ஆம் தேதி

# “உங்களுடன் ஸ்டாலின்” முகாம் : சிதம்பரத்தில் முதல்வர் தொடங்கி வைக்கிறார்!

## நவம்பர் வரை அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறும்!

சென்னை, ஜூலை 7-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு சட்டமன்ற பேரவையில் மக்களின் குறைகளை நேரடியாக கேட்டறியும் பணிகள் துவக்கப்படும் என அறிவித்திருந்தார்.

முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில், “உங்களுடன் ஸ்டாலின்” என்ற திட்டம் துவக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 10,000 சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.

“உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தின் கீழ் நடத்தப்படும் முதல் முகாமினை, வரும் 15.07.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைக்க உள்ளார். இந்தத் திட்டம் ஜூலை 15 முதல் நவம்பர் மாதம் வரை அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறும்.

தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள்/திட்டங்களை அவர்கள் வசிக்கும் பகுதிக்கே சென்று வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் நகர்புறப் பகுதிகளில் 3,768 முகாம்களும் ஊரகப் பகுதிகளில் 6,232 முகாம்களும் நடைபெறும். இந்த முகாம்களில் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத் துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 துறைகளைச் சார்ந்த 46 சேவைகளும் வழங்கப்படும். அத்துடன் முகாம் களுக்கு வருகை தரும் பொதுமக்களின் உடல் நலனைப் பேணும் வகையில், மருத்துவ சேவைகளை வழங்க, மருத்துவ முகாம்களும் நடத்தப்படும்.

இத்திட்டத்தின் கீழ், தன்னார்வலர்கள், ஒவ்வொரு வீட்டிற்கும் நேரடியாகச் சென்று, முகாம் நடைபெறும் நாள். இடம் குறித்த விவரங்கள், அங்கு வழங்கப்படவுள்ள பல்வேறு அரசு துறைகளின் திட்டங்கள்/ சேவைகளை விவரித்து, அவற்றில் பயனடைவதற்கான தகுதிகள், தேவைப்படும் ஆவணங்கள் குறித்து தெரிவிப்பதோடு தகவல் கையேட்டினையும், விண்ணப் பத்தினையும் வழங்குவர்.

மேலும் இந்த முகாம்களில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் எவரேனும் இருப்பின் முகாம் நடைபெறும் நாளன்று முகாமிற்குச் சென்று தங்கள் விண்ணப் பத்தினை அளிக்கலாம். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விண்ணப்பம் “உங்களுடன் ஸ்டாலின்” முகாம்களில் மட்டுமே வழங்கப்படும்.

இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது 45 நாட்களில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இத்திட்டம் குறித்த விபரங்களை பொதுமக்களுக்கு முறையாக தெரிவிப்பதற்காக, “உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தின் கீழ் தன்னார்வலர்கள் மூலம் வீடு வீடாக சென்று விண்ணப்பம் மற்றும் தகவல் கையேடு வழங்கும் பணி. 07.07.2025 முதல் தொடங்க உள்ளது. இந்தப் பணி மூன்று மாதங்கள் தொடர்ச்சியாக நடைபெறும். இப்பணிக்காக சுமார் 1 லட்சம் தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

“உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தில் உங்கள் பகுதிகளில் நடைபெறும் முகாம்களில் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## தி.மு.க. அயலக அணி

### திருச்சி மத்திய மாவட்டம்

### திருச்சி மாநகரம் (மேற்கு)

### அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

**தி.மு.க. அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா அறிவிப்பு!**

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. அயலக அணியின் திருச்சி மத்திய மாவட்டம்- திருச்சி மாநகரம் (மேற்கு) அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### திருச்சி மத்திய மாவட்டம்

**திருச்சி மாநகரம் (மேற்கு)**

தலைவர் - எம். சிவதாஸ், 78இ, மேலவண்ணாரப்பேட்டை புத்தூர், திருச்சி - 17.

துணைத் தலைவர் - பா. அப்தாலிக் 39, கிருஷ்ணாபுரம் நடுத் தெரு, திருச்சி.

அமைப்பாளர் - எம்.ஜ. துபேல் அகமது 62/எ, 2வது கிராஸ் பாத்திமா நகர், உறையூர், திருச்சி.

துணை அமைப்பாளர்கள் - 1) டி. சதீஷ்குமார் 47, காமராஜர் தெரு, தென்னூர், திருச்சி. 2) என். மணிகண்டன் ஸ்ரீஜித் அபார்ட்மெண்ட், லிங்கம் நகர், உறையூர், திருச்சி - 3. 3) ஜெ. மரிய மிதுன் ராஜ் 36/34ஏ, சங்கீதபுரம், தென்னூர், திருச்சி. 4) எஸ். கார்த்திக் 3, கீழத் தெரு, உய்யகொண்டான் திருமலை, திருச்சி. 5) அ. ஆசிக் உசேன் 18, செவந்தி பிள்ளையார் கோவில் தெரு, உறையூர், திருச்சி - 3.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 05-07-2025.

எம்.எம். அப்துல்லா, எம்.பி.,
செயலாளர்
தி.மு.க. அயலக அணி



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் தெற்கு ஒன்றியம், தேவனூர் கிராமத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தனது சொந்த வாக்குச்சாவடியில் “ஓரணியில் தமிழ்நாடு” எனும் பரப்புரையில் தம்மை உறுப்பினராக சேர்த்து பொதுமக்களிடம் கழக அரசின் சாதனைகள், ஒன்றிய அரசின் மக்கள் விரோத நடவடிக்கையை எடுத்துக் கூறி உறுப்பினர் சேர்க்கை, பரப்புரையை துவக்கி வைத்தார். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இ.என். கிருஷ்ணன்

**ஜூலை 7 (2015)**



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

ஒருங்கிணைந்த சென்னை மாவட்டத்தில் 3 முறை வட்டக் கழகச் செயலாளராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய உறுப்பினராகவும், சேமாத்தம்மன் திருக்கோவில் அறங்காவலர் குழு தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்துகொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# சேலம் மத்திய மாவட்ட தி.மு.க தொண்டர் அணி அறிமுகக் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் ஆர்.பாலகிருஷ்ணன் வேண்டுகோள்!

*சேலம், ஜூலை 7-*

*சேலம் மத்திய மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் ஆர்.பாலகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. தொண்டர் அணி அறிமுகக் கூட்டம் 9.7.2025 - புதன்கிழமை. காலை 10 மணிக்கு. மாவட்ட கழக அலுவலகம். கலைஞர் மாளிகையில் நடைபெற உள்ளது.*

*ஆகவே சேலம் மத்திய மாவட்டத்தை சேர்ந்த தி.மு.க. தொண்ட் அணி தலைவர், துணை தலைவர், மாநகர அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், புதிதாக நியமிக்கப்பட்ட பகுதி, ஒன்றியம், பேரூர், நகர கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்*

**பொருள்** *1) புதிய கழக உறுப்பினர்கள் சேர்த்தல்.*

*2) 2026ல் நடைபெற இருக்கும் பொது தேர்தலில் சிறப்பாக பணியாற்றுவது.*

*மேற்கண்டவாறு சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. தொண்டர் அணி அமைப்பாளர் ஆர்.பாலகிருஷ்ணன் கூறியுள்ளார்*

## தி.மு.க. அயலக அணி

### சேலம் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் நியமனம்!

**தி.மு.க. அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா அறிவிப்பு!**

சேலம் கிழக்கு மாவட்ட அயலக அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட க. திருநாவுக்கரசு அப்பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு அவருக்கு பதிலாக **ச. பிரதீப்,** (5/103, ஆத்துமேடு, பனமரத்துப்பட்டி, சேலம்) அவர்கள் சேலம் கிழக்கு மாவட்ட அயலக அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 05-07-2025.

எம்.எம். அப்துல்லா, எம்.பி.,
செயலாளர்
தி.மு.க. அயலக அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஏ.எஸ்.குமாரசாமி

**ஜூலை 7 (2004)**



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு காங்கேயம் பேரூர்ச் செயலாளர், காங்கேயம் ஒன்றியச் செயலாளர் என கழகத்தில் பொறுப்பு வகித்து பணியாற்றியவர்.

காங்கேயம் பேரூராட்சி துணைத் தலைவர், காங்கேயம் கூட்டுறவு நிலவள வங்கி தலைவர் ஆகிய பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்துகொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**